| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.மாரிமுத்து<br>த/பெ.திரு.முத்துசாமி | அ.வ.எண். 289/2011 | 24.07.2026 |

<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தற்போது எனக்கு என்ன வயது என்றால் 57 இருக்கும். 1959 ம் வருட demand notice வா.சா.ஆ.7, 8 ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். சாம்பசிவத்திற்கும், எனக்கும் ஏறத்தாழ ஒரே வயது இருக்குமா என்றால் இல்லை, அவர் என்னைவிட பெரியவர், அவர் இறக்கும்போது அவருக்கு 70 வயது. வா.சா.ஆ.5 எங்களது வீட்டில் ஓட்டு போடுவதற்கு தகுதியான நபர்கள் யார் என்பதற்கான அட்டை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.5 ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.5 முதல் 7 வரையிலான ஆவணங்கள் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எங்கள் வீட்டில் இருந்தது. நாங்கள் தற்போது எந்த வீட்டில் குடியிருக்கிறோமோ அந்த வீட்டில் இருந்ததா என்றால் ஆமாம். நாங்கள் தற்போது குடியிருக்கும் வீடு என்பது மும்முடிசோழமங்கலம் போகும் ரோட்டில் ஆரம்பத்தில் உள்ளது என்றால் சரிதான்.

3) நாங்கள் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கும், வழக்கு சொத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 300–400 மீட்டர் இருக்கும். வா.சா.ஆ.8 ஆனந்தாயிம்மாளின் இறப்பு சான்றிதழ் எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை, வருடம் 1979. ஆனந்தாயிம்மாளின் இறந்தது எந்த வருடம் என்றால் அதே 1979 ம் வருடம் தான், அதே வருடமே பதிந்துவிட்டோம். வா.சா.ஆ.8

ஆனந்தாயிம்மாளின் இறப்பு சான்றிதழை பதிவு செய்ய விவரம் சொல்லியது யார் என்றால் எனது அத்தை இளஞ்சியம்.

4) மேற்படி இளஞ்சியம் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். 1979ம் வருடம் ஆனந்தாயிம்மாளின் இறப்பு சான்றிதழை வாங்கியது யார் என்றால் நான்தான். அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 9–10 வயது இருக்கும். வா.சா.ஆ.8 இறப்பு சான்றிதழில் 27.01.1981ல் பதிவு செய்யப்பட்டதாகவும், 30.01.1981ல் மேற்படி இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும் வா.சா.ஆ.8ல் கண்டுள்ளது என்றால் சரிதான்.

5) எனது அத்தை இளஞ்சியம் சொன்ன தவறான தகவலின் அடிப்படையில், தவறான தேதி குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, வா.சா.ஆ.8 இறப்பு சான்றிதழில் கண்ட ஆனந்தாயி அம்மாளின் இறப்பு தேதி தவறானது என்றால் சரியல்ல. பொதுவாக இறந்த வருடத்திலேயே இறப்பு பதிவு செய்யப்பட்டால் அது சரியான தேதியாக இருக்கும் என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.9, 10 வருவாய் நீதிமன்றத்திலிருந்து வந்த அறிவிப்பினை நான் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் குத்தகைத்தாரர் தொடர்பான விசாரணைக்காக, மற்ற விவரங்கள் நியாபகம் இல்லை. வா.சா.ஆ.9, 10 அறிவிப்புகளுடன் மனு இணைக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது, மேற்படி மனு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி மனு இருந்தால் தான் மேற்படி அறிவிப்புகள் எதற்காக அனுப்பப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) மேற்படி அறிவிப்புகள் வழக்கு சொத்துக்களுடன் தொடர்புடையதா என்றால் இல்லை. நான் சொல்லும் நந்தவனத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.55. மேற்படி நந்தவனத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 49 சென்ட்டில் எங்களுக்கு 15 சென்ட் கூட்டுப்பட்டாவில் இருந்தது, அதில் 3 சென்ட்டை விற்றுவிட்டனர். மேற்படி கூட்டுப்பட்டாவில் யாருடைய பெயர் இருந்தது என்றால் நியாபகம் இல்லை.

8) மேற்படி நந்தவனத்தில் ஆனந்தாயி அம்மாளுக்கு பாத்தியம் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.15 கூட்டுப்பட்டாவில் எனது பெயரோ, எனது தந்தை பெயரோ, அகிலாண்டம் பெயரோ, அகிலாண்டத்தின் கணவர் பெயரோ உள்ளதா என்றால் இல்லை. ஆனால் அதில் ஆனாந்தாயி அம்மாள் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் விஸ்தீரணம் 16 ஏர்ஸ்க்கு சுமார் 40 சென்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

9) வா.சா.ஆ.13, 14, 15 ஆவணங்கள் நந்தவனத்திற்கு சம்பந்தமானது என்பதால், மேற்படி ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 பத்திரம் 1917 ல் ஏற்பட்டது என்பதால் அது குறித்து எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். சிவகாமி அம்மாள் ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் படி வழக்கு சொத்து ஆனந்தாயியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

10) மேற்படி ஆனந்தாயியம்மாள் உயிருடன் இருந்த காலத்திலேயே சாம்பசிவத்திற்கு வழக்கு சொத்தை குறித்து உயில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, ஆனந்தாயியம்மாள் இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பாக படுத்தப்படுக்கையாக இருந்தார், அதனால் யாருக்கும் எழுதவில்லை. மேற்படி உயிலின் படி வழக்கு சொத்து சாம்பசிவத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சாம்பசிவம் தனது காலத்தில் தனது மைனர் மகன் சிவக்குமாருக்காக அவரது தாயார் சரஸ்வதி அம்மாளை கார்டியனாக நியமித்து உயில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

11) அதன் அடிப்படையில் சிவக்குமார், பேரூராட்சியில் அனுமதி பெற்று, கூரை வீட்டை மெத்தை வீடாக மாற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் உண்மை என்பதால் ஆனந்தாயி அம்மாள் 1979 ல் இறந்த பிறகு 30 வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு , சிவக்குமார் வீடு கட்ட ஆரம்பத்தவுடன் அவரிடம் இருந்து ஆதாயம் பெறலாம் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12) எனது கூடுதல் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சிவகாமி அம்மாளின் மூத்த மகள் அகிலாண்டம் என்று கூறியுள்ளதற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். மேற்படி அகிலாண்டத்தின் மகன் தான் முத்துசாமி என்று கூறியுள்ளதற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எங்களுக்கு எவ்வித பாகமும் இல்லாததால்

எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இலால்குடி.